**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்**

ந.க.எண்.2513/இ2/2019 நாள்.03.05.2019

| | |
|---|---|
| பொருள் – | குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம்–2019–2020ம் கல்வியாண்டில் அனைத்து சிறுபான்மையற்ற தனியார் சுயநிதி பள்ளிகளில் வாய்ப்பு மறுக்கப்பட்ட மற்றும் நிலிவடைந்த பிரிவினர் – 25% இடஒதுக்கீட்டில் உள்ள காலி இடங்களை விட அதிகமான அளிவில் விண்ணப்பிக்கப்பட்ட பள்ளிகளில் விண்ணப்பித்த மாணவர்களுக்கு 06.06.2019 அன்று குலுக்கல் முறையில் சேர்க்கை மேற்கொள்வதற்கான அலுவலர்கள் நியமித்து ஆணை வழங்குதல் – சார்பு |
| பார்வை – | 1. குழந்தைகுளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009 மற்றும் தமிழ்நாடு விதிகள் 2011<br>2. அரசாணை நிலை எண்.60 பள்ளிக்கல்வி(எக்ஸ்2)துறை நாள் 01.04.2013<br>3. அரசாணை நிலை எண்.66 பள்ளிக்கல்வி(பொது2)துறை நாள் 07.04.2017<br>4. குழந்தைகுளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்ட மாநில முதன்மை தொடர்பு அலுவலர் மற்றும் தமிழ்நாடு மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்குநரின் செயல்முறைகள் , சென்னை–06 ந.க.எண்.843/இ1/2019 நாள். .05.2019. |

---

பார்வையில் காணும் அரசாணைகள் மற்றும் செயல்முறைகளுக்கிணங்க , குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம்–2009ன் படி 2019–20ம் கல்வி ஆண்டில் அனைத்து சிறுபான்மையற்ற தனியார் சுயநிதி பள்ளிகளில் விண்ணப்பித்த குழந்தைகளுக்கு 25% இடஒதுக்கீட்டில் உள்ள காலி இடங்களை விட அதிகமான எண்ணிக்கையில் விண்ணப்பிக்கப்பட்ட பள்ளிகளில் விண்ணப்பித்த மாணவர்களுக்கு 06.06.2019 அன்று காலை 11.00 மணிக்கு குலுக்கல் முறையில் சேர்க்கை மேற்கொள்வதற்கு இணைப்பில் உள்ள அலுவலர்கள் நியமித்து ஆணை வழங்கப்படுகிறது மேலும் 25% இடஒதுக்கீட்டினை விட அதிகமான எண்ணிக்கையில் விண்ணப்பங்கள் பெறப்பட்ட பள்ளிகளில் பார்வை 3ல் கண்ட அரசாணையில் வழங்கப்பட்டுள்ள கூடுதல் வழிகாட்டுதல்களை பின்பற்றி தகுதியான விண்ணப்பங்களுக்கு குலுக்கல் முறையில் 25% இடங்களுக்கான தெரிவும், ஒவ்வொரு பிரிவிற்கும் 5 இடங்களுக்கான காத்திருப்பு பட்டியல் தெரிவும் மேற்கொள்ளப்பட வேண்டும். குலுக்கல் மூலம் தேர்வு செய்யப்பட்ட குழந்தைகள் பெயர் பட்டியல் மற்றும் காத்திருப்பு பெயர் பட்டியலில் குலுக்கலின் போது இருந்த ஆய்வு அலுவலர், பள்ளியின் தலைமை ஆசிரியர் /பள்ளி முதல்வர், குறைந்தபட்சம் இரண்டு பெற்றோர்கள் கையொப்பமிட வேண்டும். குலுக்கல் மூலம் சேர்க்கைக்காக தேர்வு செய்யப்பட்ட குழந்தைகள் பெயர் பட்டியல் மற்றும் காத்திருப்பு பெயர் பட்டியல் குலுக்கல் நடைபெற்ற அன்றே பள்ளி நிர்வாகத்தால் பள்ளியின் தகவல் பலகையில் ஒட்டப்பட வேண்டும். பெற்றோரின் கைபேசிக்கு குறுந்தகவல் (SMS) அனுப்பப்பட வேண்டும். தேர்வு செய்யப்பட்ட குழந்தைகளின் பட்டியல் பள்ளியின் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும். ஆய்வு அலுவலர்களாக நியமிக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களை 06.06.2019 அன்று சார்ந்த பள்ளிக்கு செல்லும் வகையில் 05.06.2019 மாலை பணியிலிருந்து விடுவித்து அனுப்புமாறு சார்ந்த பள்ளி தலைமை ஆசிரியருக்கு தெரிவிக்கப்படுகிறது. மேலும் இப்பொருள் சார்ந்து SSA அலுவலகம் , காட்பாடியில் 04.05.2019 அன்று மாலை 2.00 மணிக்கு நடைபெறும் கூட்டத்திற்கு நியமிக்கப்பட்ட அலுவலர்கள் அனைவரும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

இணைப்பு : 1. ஆய்வு அலுவலர்கள் பட்டியல்.
2. சேர்க்கை சார்பான அறிவுரை நகல்

பெறுநர் : சார்ந்த வட்டாரக் கல்வி அலுவலர்கள்,
சார்ந்த ஆசிரியர் பயிற்றுநர்கள் மற்றும்
சார்ந்த முதுகலை பட்டதாரி ஆசிரியர்கள்.

03/06/19

நகல்: 1. மாவட்டக் கல்வி அலுவலர்,
வேலூர் / இராணிப்பேட்டை / அரக்கோணம் /
திருப்பத்தூர் /வாணியம்பாடி.